RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt21s117

OPEN ACCESS

# தமிழர் பண்பாட்டில் சிறுதெய்வ வழிபாடு

**நீ. அகிலாண்டேஸ்வரி [அ, *]**

[அ] அரிய கையெழுத்துச் சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்- 613010, தமிழ்நாடு, இந்தியா.

# Small deity worship in Tamil culture

**N. Akilandeswari [a, *]**

[a] Department of Rare Paper manuscript, Tamil University, Thanjavur- 613010, Tamil Nadu, India.

* Corresponding Author:
akilaneelakandan4a@gmail.com

Received: 04-11-2020
Revised: 07-06-2021
Accepted: 10-06-2021
Published: 13-06-2021

Check for updates

**ABSTRACT**

Worship is the rules that are carried out in order to get closer and feel by having a higher standard. The effects of such a human mentality can be said to be myths such as magic, ritual, belief, worship. And just as human life, which began with nature, has undergone various evolutions, so has the cult of faith. Thus, the study reveals that idolatry, one of the most popular forms of worship in the country, has gained unshakable faith in the evolving human civilization over time. Worship of this deity, which is a part of the culture associated with the life of the people and is a miraculous miracle of enlightenment, has become popular in the scientific world as a bridge connecting the culture of the ancestral way of life and strengthening the unity among the people.

**Keywords:** Folklore, Tamil culture, Idolatry, Ettuthogai, Tholkappiyar.

## முன்னுரை

சமூக வாழ்வின் அச்சானியாக விளங்குகிற பண்பாடு மனித இனத்திற்குப் பொதுப்படையாக இல்லாமல் இனம், நாடு, மொழி என்கிற பாகுபாட்டின் அடிப்படையில் வேறுபட்டு விளங்குவதைக் காணலாம். மதங்கள் தோன்றுவதற்கு முன் ஆதிமனிதனிடம் இருந்த பயத்தின் காரணமாகவும், தேவையின் காரணமாகவும் எழுந்தது வழிபாடு. வீரம், இளமை, தீமையை ஒழிக்கும் தன்மை, பிறரைக் காத்து நிற்கும் பண்பு, இவற்றையெல்லாம் திரட்டி தெய்வ வடிவமாக செய்திருக்கிறார்கள் பண்டைக்கால மக்கள். மனிதனாகப் பட்டவன் தன்னுடைய வாழ்வில் ஒழுக்கத்துடனும் நடுவுநிலையுடனும் வாழ்வதற்குப் பண்பாடு என்பது மிகவும் அவசியமான ஒன்றாகிறது. இத்தகையப் பண்பாட்டுச் சிறப்பின் முதல் கூறு சிறுதெய்வ வழிபாடு ஆகும். எல்லா மதங்களுக்கும் பொதுவான இவ்வழிபாடானது இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையே ஒரு தொடர்பினை ஏற்படுத்துகிற வகையில் அமைந்துள்ளது. தமிழர் வாழ்வியலோடு பிணைந்திருக்கிற இறையுணர்வு பண்பின் வாயிலாக தமிழரின் சிறுதெய்வ வழிபாட்டு மரபை ஆய்கிறது இக்கட்டுரை.

## சிறுதெய்வ வழிபாடு

மனிதன் தவறு செய்யும் போது அவனுடைய மனதினை அச்சுறுத்தி நல்வழிப் படுத்தும் ஒரு உந்து சக்தியாகச் சிறுதெய்வ வழிபாடுத் திகழ்கிறது. மேலும் மனித வாழ்வில் நடைபெறும் அனைத்து இன்ப, துன்பங்களுக்கும் தெய்வமே காரணம் என்ற நம்பிக்கையினாலும் தெய்வ வழிபாட்டினை மேற்கொள்கின்றனர். இதற்குச் சான்று பகர்கின்ற வகையில் கீழ்க்காணும் வரிகள் இடம்பெற்றுள்ளன.

"அழிவிலர் முயலும் ஆர்வ மாக்கள்

வழிபடு தெய்வம் கண் கண்டாங்கு...."

தாங்கள் வழிபடும் தெய்வம் தம்முடைய முயற்சிக்குத் துணையாக வருகின்றன என்று மக்கள் தெய்வத்தின் மேல் கொண்டுள்ள நம்பிக்கையின் வழி அறியலாகிறது (Balasubramaniyam,, 2011). மேலும் தம்மைப் பாதுகாக்க வேண்டியே மக்கள் தெய்வத்தினை வழிபட்டனர் என்பதனை உறுதிப் படுத்தும் விதமாக,

"வழிபட்ட தெய்வம் தான் வலினைச் சார்ந்தார் கண்

கழியும் நோய் கைம்மிக அணங்கியது போல...."

என்ற கலித்தொகைப் பாடல் வரிகள் இடம்பெற்று உள்ளது குறிப்பிடத்தக்கது (Viswanathan, 2011). எனவே ஒவ்வொரு நிகழ்விற்கும் இயற்கை சக்திதான் காரணம் என்ற எண்ணத்தில் வழிபடத் தொடங்கியதன் தோற்றமே இன்று நாம் வழிபடும் நாட்டுப்புறத் தெய்வங்கள் எனலாம்.

## கோவில் அமைவிடங்கள்

சிறுதெய்வக் கோவில்கள் பொதுவாக ஊரின் எல்லை, குளக்கரை, களத்துமேடு, ஊர்மந்தை, கண்மாய்க்கரை, அழிந்த கோட்டை வாயிற்பகுதி, வயற்புறம், நெடுஞ்சாலை ஓரம் ஆகிய இடங்களில் அமைந்து இருக்கும். ஆகவே அந்த இடங்கள் காவலுக்குரிய இடங்கள் ஆகும். எனவே பெரும்பாலான சிறுதெய்வங்கள் காவல் தெய்வங்களாக உள்ளன.

## வழிபடும் முறை

பொதுவாக நிலவுடைமைச் சமூக அமைப்பில் உள்ள அனைத்துப் பிரிவினரும் இச்சிறு தெய்வ வழிபாட்டினை மேற்கொள்கின்றனர். மேலும் சிறுதெய்வங்கள் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் ஆயுதங்களை ஏந்தி இருப்பது அவற்றின் பொதுப் பண்பாகும். எனவே இச்சிறு தெய்வங்கள் அனைத்தும் வீர வழிபாட்டுத் தெய்வங்களாகக் கருதப்படுகின்றன. மேலும் இத்தகையச் சிறுதெய்வ வழிபாட்டு முறையில் தெய்வங்களுக்குச் செய்யப்படும் சடங்குகளும், வழிபாட்டு முறைகளும் எந்தவித ஆகம விதிகளுக்கும் உட்படாத வண்ணம் கிராம மக்களின் விருப்பத்திற்கு ஏற்றாற் போல் காலம் காலமாச் செய்யப்பட்டு வருகின்றன. இருப்பினும் இத்தகைய வழிபாட்டு முறைகள் ஒவ்வொரு தெய்வத்திற்கும் தகுந்தாற் போல் சற்று மாறுபட்ட நிலையில் அமைந்துளன.

## சிறுதெய்வ வழிபாட்டில் பெண்

பொதுவாகப் பெண் தெய்வங்கள் செழிப்பைக் குறிக்கும் தெய்வமாகக் கருதப்படுகின்றன. ஏனெனில் இவை உடல்வளம், மனவளம், மகப்பேற்று வளம், பயிர்வளம் ஆகியவற்றினைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. மேலும் இவை யாவும் பெண் தெய்வக் கடமைகள் என்று சொன்னால்

ஏற்புடையதாக இருக்கும். அந்த வகையில் தமிழகத்தைப் பொறுத்தவரை கொற்றவை வழிபாடு ஆதி தெய்வ வழிபாடாகச் சிறப்பிக்கப்படுகிறது. அதாவது வளம் செறிந்த நிலங்களுக்கு ஆணை தெய்வமாக்கிவிட்டு, வளம் குன்றிய பாலை நிலத்திற்குக் கொற்றவை என்ற பெண்ணைத் தெய்வமாக்கி வழிபட்டனர். இதற்கான காரணம் வளமை இல்லா நிலத்தையும் செழிப்புடன் மாற்றக் கூடிய ஆற்றல் பெண்ணுக்கு உண்டு என்பதன் அடிப்படையே என்று சொன்னால் அக்கருத்து ஏற்புடையதாக இருக்கும். ஆகவே இக்கருத்திற்கு சான்று காணும் வகையில் இலக்கணச் செய்யுள்கள் இடம்பெற்று உள்ளன.

"மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த

கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே…."

என்ற செய்யுளின் வழி கொற்றவையைத் தமிழ் மக்கள் வழிபட்ட நிலையினை அறிய முடிகிறது (Ilampuranar, 2005). மேலும்,

"வெற்றிவேல் தடக்கை கொற்றவை அல்லள்…."

என்ற சிலம்பின் பாடலடியின் மூலமாக வெற்றி தரும் தெய்வமாகக் கொற்றவையை வழிபட்ட நிலை தெளிவாகிறது (Puliyur Kesigan,, 2014). மேலும், இதனை உறுதிப்படுத்தும் விதமாக கீழ்க்காணும் வரிகள் இடம்பெற்றுள்ளன.

"வென்றி வெல்போர்க் கொற்றவை

---------------சிறப்பிற் பழையோள்…"

அதாவது இங்கு வென்றி என்பது போர்க்களத்தில் வீரர்கள் பெறக்கூடிய வெற்றியைக் குறிக்கிறது (Mohan, 2011). மேலும் பழையோள் எனக் குறிக்கப்படுவதால் தமிழ்த் தெய்வங்களுள் கொற்றவை தொன்மைத் தெய்வம் என்பது தெரியவருகிறது. இத்தொன்மைத் தெய்வமான கொற்றவையைக் காளி(அழல்) என்ற பெயரோடும் வணக்கி உள்ளனர் சங்க கால மக்கள். இதற்குச் சான்று பகர்கின்ற வகையில் "அழல் திகழ்ந்திமைக்கும் அஞ்சுவடு…." என்ற வரிகள் இடம் பெற்றுள்ளன (Mohan, 2011). மேலும் கொற்றவை, காளி, காடுகிழாள் என்று சங்ககால மக்களால் வணங்கப்பட்டத் தெய்வங்கள் நாகரீக வளர்ச்சி மாற்றத்தினால் தற்போது துர்க்கை என்ற பெயர் கொண்டு வணக்கப்படுகிறது. இதனை,

"விடர்முகை அடுக்கத்து விரல்கெழு சூலிக்குக்

கடனும் பூணாம்; கைநூல் யாவாம்…."

என்ற குறுந்தொகைப் பாடல் அடிகளால் அறிய முடிகிறது (Puliyur Kesigan,, 2012).

## சிறுதெய்வ வழிபாட்டில் படையல்

சிறுதெய்வ வழிபாட்டில் பலியிடலும், மாமிசப் படையலும் முக்கிய இடம் வகுக்கின்றன. பலியிடல் என்பது காலம் காலமாக தொன்றுதொட்டு மக்களிடத்தில் இருந்து வருகின்ற ஒரு சடங்கு முறை ஆகும். அதாவது ஒரு உயிரைக் கொடுப்பதன் மூலமாக மற்றொரு உயிர் காப்பாற்றப்படுகிறது என்ற வளமான நம்பிக்கையே பலியிடலுக்கு அடிப்படையாக அமைகிறது. இதனால் இயற்கையையும், தெய்வத்தையும் திருப்தி அடைய செய்யமுடியும் என்ற அதீத நம்பிக்கைக் கொண்டுள்ளனர். அவ்வாறு அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையின் வாயிலாக தெய்வங்களுக்கு உயிர்பலியும், குருதி கலந்த உணவும் படையல் இடப்பட்டன என்பதனை சங்க இலக்கியப் பாடல் வரிகள் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது.

“கணங்கெழு கடவுட்கு உயிர்பலி தூஉய்ப்

பரவினம் வருகஞ் சென்மோ....”

அதாவது மலைப் பகுதிகளில் வாழும் மக்கள் தாங்கள் உண்ணும் புலால் உணவினையே இறைவனுக்குப் படைத்து வழிபட்டனர் என்ற செய்தி மேலோங்கியுள்ளது (Balasubramaniyam,, 2011). மேலும்,

“பலிபெறு கடவுட் பேணி கலிசிறந்து...”

என்ற பாடல் அடியின் வாயிலாகப் பலிபெறும் குறிஞ்சிக் கடவுளான முருகவேளை வழிபட்டு ஆராவாராத்துடன் களிப்புற்று இருந்தனர் என்பது தெளிவாகிறது (Balasubramaniyam,, 2011). மேலும் ஆட்டின் கழுத்தினை அறுத்து அதோடு திணைநெல்லினையும் பரப்பி வழிபட்டதனைக் கீழ்காணும் குறுந்தொகைப் பாடல் வரிகள் மூலமாக அறிய முடிகிறது.

“மறிகுரல் அறுத்து திணைப்பிரப்பு இரீஇ....”

என்பதன் மூலம் சங்க காலம் தொட்டு இக்காலம் வரையிலும் பலியிடுகின்ற வழக்கமானது நம் தமிழ் மக்களிடம் தொன்றுதொட்டு இருந்துகொண்டு தான் இருக்கிறது என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது (Puliyur Kesigan, 2012). மேலும் இவை அனைத்துமே மக்களின் நம்பிக்கையினை வெளிப்படுத்தும் ஒரு பண்பாட்டு வளர்ச்சி நிலையாக அமைந்துள்ளன என்று சென்னால் அது மிகையாகாது. இத்தகையப் பண்பாட்டு வளர்ச்சி நிலையானது மக்களின் வாழ்க்கை முறையினை வடிவமைக்கும் ஒரு வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்கிது.

## சிறுதெய்வ வழிபாட்டில் காணலாகும் தமிழர் பண்பாடு

சிறுதெய்வ வழிபாட்டினைக் கடைபிடிப்பவர்கள் கிராம புறத்தில் வாழ்கின்ற பாமரமக்களே. இப்பாமர மக்களே சிறுதெய்வ வழிபாட்டின் முன்னோடிகள் என்று சொன்னால் அது மிகவும் ஏற்புடையதாக இருக்கும். மேலும் தனிமனித நோய், பயம் ஆகியவற்றினைத் தீர்க்கும் சக்தி இத்தெய்வங்களுக்கு உண்டு என்ற நம்பிக்கை இம்மக்களிடையே நிறைந்து உள்ளது. அது மட்டுமல்லாது இச்சிறு தெய்வ வழிபாடானது முன்னோர் வழிவகைப் பண்பாட்டினைப் பறைசாற்றுவதோடு, மக்களிடையே ஒற்றுமையைப் பலப்படுத்தும் ஒரு இணைப்புப் பாலமாகவும் அமைந்து உள்ளது.

## முடிவுரை

மனிதனை நன்னெறிப் படுத்தி வாழ்வதற்கே வேதங்களும், கடவுள்களும். இவை மனிதகுல வளர்ச்சிக்கு வித்தாக அமைகின்றன.சமுதாயம், சமயச் சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களை அடிப்படையாகக் கொண்ட இச்சிறுதெய்வ வழிபாடு கலாச்சார வழிபாட்டின் அடிப்படைக் கருவி எனலாம். வறண்டு போன பாலை நிலத்தினை வளமாக்கும் சக்தியானது பெண்ணுக்கு உண்டு என்பதால் பாலைக்கு கொற்றவை(பெண்) தெய்வமாக்கப்படுதல், தாய்தெய்வ வழிபாட்டின் முதன்மை ஆகியவற்றினை அறிய முடிகிறது. தமிழ் சமுதாயம் தெய்வ வழிபாட்டை தங்கள் கலாச்சார வளர்ச்சியின் கருவியாகக் கொண்டிருக்கின்றன. ஆகையால் தான் இவ்விஞ்ஞான உலகில் இன்றும் இவ்வழிபாடு பிரசித்திப்பெற்று இருக்கிறது. எனவே அவை மக்களின் வாழ்க்கையோடு இணைந்த பண்பாட்டின் ஒரு பகுதியாகவும், இறை உணர்வூட்டும் அற்புத சக்திகளாகவும் திகழ்கின்றன.

## References

Balasubramaniyam, K.V., (2011) Natrinai, Fourth Edition, New Century Book House, Chennai, India.

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, India.

Mohan, E.R., (2011) Ten Idylls/Pathu Paatu (Volume 1), Tirumurugatruppadai, Fourth Edition, New Century Book House, Chennai, India.

Puliyur Kesigan, (2012) Kurunthogai, Third Edition, Saradha pathippagam, Chennai, India.

Puliyur Kesigan, (2014) Silappatikaram, Fourth Edition, Saradha pathippagam, Chennai, India.

Viswanathan, A., Kalithogai, Fourth Edition, New Century Book House, Chennai, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License